மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் , இராதாபுரம்.

முன்னிலை - திரு.மு.ஆனந்த், பி.ஏ., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராதாபுரம்.

2023 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இடைக்கால மனு எண் 01/2022**

**இன்**

**இடைக்கால மனு எண் 78/2015**

**இன்**

**அசல் வழக்கு எண். 46/2022**

முருகேசன் ... மனுதாரர்/வாதி

// எதிர்//

1. மஞ்சுளா

2. ராமசாமி (எ) ராஜ் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 01.12.2022-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 23.02.2023 -ம் தேதி அன்று என் முன்னால் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.கல்யாணகுமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.காந்திமதிநாதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை, மனுதாரர் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசிலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1) மனுதாரர்/வாதியால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை பிரிவு 151 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



M ANAND Digitally signed by M ANAND Date: 2023.02.28 16:53:42 +0530

2) **மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர் பிரதான வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள வழக்குரையை இவ்மனுவின் ஒரு பாகமாக எடுத்துக்கொள்ள வேண்டியது. வழக்கு நிலுவையில் ஆணையர் நியமனம் செய்ய கோரி வ.ம.எண்.78/2015 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு, 03.12.2015 அன்று அம்மனு அனுமதிக்கப்பட்டு நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர் திரு.எம்.அமுதன் அவர்களை நியமனம் செய்யப்பட்டு, ஆணையர் உத்தரவும் வழங்கப்பட்டு ஆணையர் ஊதியம் 11.12.2015 அன்று சமு்கம் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டது. அறிக்கை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது, இந்நிலையில் 07.01.2016 அன்று சமூகம் நீதிமன்றம் ஆணையர் ஊதியம் வைப்பீடு செய்யப்பட்டதை பதிவு செய்து மனுவை முடித்து வைத்து உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி மனு முடித்து வைக்கப்பட்ட காரணத்தினால் ஆணையர் மனு தபசில் சொத்துக்களை பார்வையிட முடியவில்லை. வழக்கு தாவா சம்மந்தமாக மனு தபசில் சொத்தை ஆணையர் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டியதுள்ளதால் மேற்படி மனுவை மீண்டும் திறக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இல்லாதபட்சத்தில் மனுதாரருக்கு அளவிட முடியாத கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்று மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதேயாகும்.

மேற்படி ஆணையர் மனு, ஆணையர் அறிக்கை வழக்கின் ஒரு பகுதி என்பதாலும், அதனை நிலுவையில் வைத்திருக்க அவசியம் இல்லை என்பதால் முடித்து வைக்கப்படுகிறது. மேற்படி மனு 03-12-2015 ல் முடித்து வைக்கப்பட்டது. ஆனால் மேற்படி ஆணையர் அறிக்கை பற்றிய குறிப்பு எதுவும் வழக்கு கட்டில் குறிப்பிடவில்லை, (Case Bundle) மற்றும் கடந்த 7 வருடங்களாக ஆணையர்



M ANAND Digitally signed by M ANAND Date: 2023.02.28 16:53:48 +0530

அறிக்கையும் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுக்க எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் இல்லாத நிலையில், மேற்படி ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் வழக்கு விசாரணைக்கு அவசியமானது என்று ஏற்கனவே நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யவேண்டி மேற்படி மனுவை மீண்டும் கோப்புக்கு எடுக்க உத்தரவிடுகிறது. செலவுத்தொகை இல்லை.

இம்மனுவை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் திருத்தம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

M ANAND Digitally signed by M ANAND Date: 2023.02.28 16:53:53 +0530

மாவட்ட உரிமையியல் (ம)

நீதித்துறை நடுவர்,

இராதாபுரம்.

**மனுதாரர்/வாதி தரப்பில் சாட்சிகள்**; இல்லை

**மனுதாரர்/பவாதி தரப்பில் சான்றாவணங்கள்**; இல்லை

**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள்**: இல்லை

**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் சான்றாவணங்கள்**: இல்லை

M ANAND Digitally signed by M ANAND Date: 2023.02.28 16:53:58 +0530

மாவட்ட உரிமையியல் (ம)

நீதித்துறை நடுவர்,

இராதாபுரம்.

மா.உ.ம.கு.ந.நீதிமன்றம்,

இராதாபுரம்

இடைமனு எண் 01/2022 -ன்

இடைமனு எண் 78/2015 ன்

அசல் வழக்கு எண்.46/2022

உத்தரவு

நாள் :28.02.2023